செ.வெ.எண்:25 நாள்:11.04.2017

**செய்திகுறிப்பு**

தமிழக அரசு விளையாட்டு த் துறையின் கீழ் செயல்பட்டு வரும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மூலமாக கல்லூரிகளில் பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு விளையாட்டுத் துறையில் சாதனைகள் படைப்பதற்கு ஏற்பட விஞ்ஞானரீதியான பயிற்சி மற்றும் தங்குமிடவசதியுடன் சத்தான உணவுடன் கூடிய சிறப்பு விளையாட்டு விடுதிகள் சென்னையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**மாணவர்களுக்கான விளையாட்டு விடுதி** சென்னை நேரு விளையாட்டரங்கம் (ம) தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி மாணவியருக்கான விளையாட்டு விடுதி சென்னை நேரு உள்விளையாட்டரங்கிலும் செயல்பட்டு வருகின்றன.

**விளையாட்டுத் தகுதிகள்**

மேற்காணும் சிறப்பு விளையாட்டு விடுதிகளில் உள்ள விளையாட்டுக்களில் பயிற்சி பெற்று சிறந்த விளையாட்டு வீரர்களாக விளங்குவதற்கு 12 ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற / பயிலும் மாணவ/மாணவியர் தகுதியுடையவர் ஆவர். தனிப்போட்டிகளில் விண்ணப்பிப்பவர்கள் மாநில அளவில் குடியரசு /பாரதியார் தின விளையாட்டுப் போட்டிகள் / அங்கீகரிக்கப்பட்ட கழகங்கள் நடத்தும் போட்டிகளில் முதல் மூன்று இடங்களில் வெற்றி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது தமிழ்நாடு அணியில் தேர்வு செய்யப்பட்டு தேசிய அளவில் (SGFI ) கழகங்கள், தேசிய விளையாட்டுப் போட்டிகள் (FEDERATION –NATIONAL GAMES ) (RGKA) நடத்தும் போட்டிகளில் கலந்து கொண்டவர்களும் விண்ணப்பிக்கலாம். குழுப் போட்டிகளில் விண்ணப்பபிப்பவர்கள் மாநல அளவில் குடியரசு/ பாரதியார் தின விளையாட்டுப் போட்டிகள் கழகங்கள் நடத்தும் போட்டிகளில் முதல் இரண்ட இடங்களில் வெற்றி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது மாநில அளவில் தேர்வு பெற்று தேசிய அளவில் அங்கீரிக்கப்பட்ட இந்திய பள்ளிகளின் விளையாட்டு கூட்டமைப்பு (SGFI )கழகங்கள் , தேசிய விளையாட்டுப் போட்டிகள் ( FEDERATION –NATIONAL GAMES) ஊரக விளையாட்டுப் போட்டிகள் நடத்தும் போட்டிகளில் கலந்து கொண்டவர்களும் விண்ணப்பிக்கலாம். கையுந்துபந்து விளையாட்டின் 185 செ.மீ மேல் உயரம் உள்ள மாணவ/மாணவிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். 2017/ 2018 ஆண்டிற்கான சிறப்பு விளையாட்டு விடுதியில் சேர்வதற்கு கீழ்காணும் விளையாட்டுக்களில் மாணவ/மாணவியர்களின் சேர்க்கை நடைபெற உள்ளது. மாணவருக்கான விளையாட்டுக்கள் தடகளம், கூடைப்பந்து, குத்துச்சண்டை, கையுந்துபந்து , பளுதூக்குதல் ஜீடோ மற்றும் இறகுப்பந்து மற்றும் வளைகோல்பந்து , மாணவிகளுக்கான தடகளம் , குத்துச்சண்டை ,கையுந்துபந்து, கால்பந்து மற்றும் ஜீடோ விளையாட்டின் சிறந்து விளங்கும் மற்றும் ஆர்வம் கொண்ட மாணவ/மாணவியருக்கு அதற்கான உரிய படிவங்களை 6.4.2017 முதல் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர்களை அணுகி பெற்றுக்கொள்ளலாம். 2017/ 2018 ம் ஆண்டின் சோர்க்கைகான விண்ணப்பங்களை என்ற (www.sdat.tn.gov.in) இணைய தளத்தில் தெரிந்து கொள்ளலாம். மேலும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை மேலாளர், சிறப்பு விளையாட்டு விடுதி, ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கம், பெரியமேடு, சென்னை 600003 என்ற முகவரியில் நேரிலோ அல்லது தபால் மூலமாவோ கிடைக்குமாறு அனுப்ப வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க வேண்டிய இறுதி நாள். 18.4.2017. சிறப்பு விளையாட்டு விடுதியில் சேர விரும்பும் மாணவ / மாணவியர்கள் மாநில அளவிலான தேர்வு 18.4.2017 அன்று சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் ஆஜராகுமாறு கரூர் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞல் நலன் அலுவலர் அவர்களால் தெரிவிக்கப்படுகிறது .

மேலும் விவரங்களை கரூர் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலகத்தை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. ( தொலைபேசி எண். 99427540453)

வெளியீடு:
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கரூர்.